08.08.2025

OS. No.111/2020

**பி.வா.சா.1 –** திரு.ரெக்ஸ் ஆண்டனி ஜேம்ஸ், த/பெ.டெரி ஜே நாதன்

(இடைக்கால மனு எண்.7/2025 மற்றும் 8/2025 ல் இன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறது)

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி :–</u>**

எனது தரப்பில் கூடுதல் சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன்.

1. 09.02.1981 1ம் பிரதிவாதியின் பெற்றோர்களின் திருமண சான்று அசல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 16 ஆகும்.**
2. 08.12.1981 முதல் பிரதிவாதியின் சகோதரியின் ஞானஸ்நான சான்று அசல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 17 ஆகும்.**
3. 03.08.1984 முதல் பிரதிவாதியின் ஞானஸ்நான சான்று அசல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 18 ஆகும்.**
4. 2005ம் வருடம் வழங்கப்பட்ட குடும்ப அட்டை அசல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 19 ஆகும்.**
5. முதல் பிரதிவாதியின் தாயாரின் வாக்காளர் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 20 ஆகும்.**
6. முதல் பிரதிவாதியின் தாயாரின் ஓட்டுநர் உரிமம் அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 21 ஆகும்.**
7. முதல் பிரதிவாதியின் தாயாரின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 22 ஆகும்.**
8. முதல் பிரதிவாதியின் ஓட்டுநர் உரிமம் அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 23 ஆகும்.**

9. 2017 ம் வருடம் வழங்கப்பட்ட குடும்ப அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 24 ஆகும்.**

10. 16.02.1935 முதலாவது பிரதிவாதியின் பாட்டி *J.V.A.*நாதன் அவர்களின் ஞானஸ்நான சான்று நகல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 25 ஆகும்.**

11. சந்தானம் பிள்ளையின் இறப்பு சான்று நகல் *(*இறந்த தேதி *06.01.1948)* **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 26 கும்.**

12. முதல் பிரதிவாதியின் தகப்பனாரின் ஓட்டுநர் உரிமம் அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 27 ஆகும்.**

13. முதல் பிரதிவாதியின் தகப்பனாரின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 28 ஆகும்.**

14. முதல் பிரதிவாதியின் தகப்பனாரின் வாக்காளர் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 29 ஆகும்.**

(பி.வா.சா.ஆ.16 முதல் பி.வா.சா.ஆ.29 வரையிலான ஆவணங்கள் வாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது.)

**<u>குறுக்கு விசாரணை:–</u>**

பி.வா.சா.ஆ.16 ஆகிய என் பெற்றோரின் திருமண சான்று நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க அதில் கண்ட முகவரிகள் தவறுதலாக குறிப்பிட்டு வழங்கி இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. என் சகோதரியின் ஞானஸ்நான சான்று ஆகிய பி.வா.சா.ஆ.17 ல் முகவரி முழுமையாக குறிப்பிடப்படவில்லை என்றால் கதவு எண் குறிப்பிடப்படவில்லை. எனது ஞானஸ்நான சான்று ஆகிய பி.வா.சா.ஆ.18 ல் முகவரி முழுமையாக குறிப்பிடப்படவில்லை என்றால் கதவு எண் குறிப்பிடப்படவில்லை. கதவு எண்.19 என்பது பிளாட் எண்.12 ஐ குறிக்கும் என்றால் சரிதான். கதவு எண்.19/1 என்பது பிளாட் எண்.13 ஐ குறிக்கும் என்றால் சரிதான். பழைய கதவு எண்.19 க்கு புதிய கதவு எண்.14 என்றால் சரிதான். பழைய கதவு

எண்.19/1 க்கு புதிய கதவு எண்.16 என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் கூட்டுக்குடும்பமாக இருந்தால் பி.வா.சா.ஆ.18 ஆகிய குடும்ப அட்டையில் என் பாட்டி பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் என் பாட்டி தனியாக பொருட்கள் வாங்க ஒரு ரேஷன் கார்டு வாங்கி வைத்திருந்தார். பி.வா.சா.ஆ.20 ஆகிய எனது அம்மாவின் வாக்காளர் அடையாள அட்டை நகலில் புதிய கதவு எண் 14 என குறிப்பிடப்பட்டிருக்கிறது. பி.வா.சா.ஆ.20 ஆகிய எனது அம்மாவின் வாக்காளர் அடையாள அட்டை நகலில் குத்துப்பா பள்ளம் என்று உள்ளது. அந்த பகுதியை அவ்வாறு தான் அழைப்பார்கள். பி.வா.சா.ஆ.20 ஆகிய எனது அம்மாவின் வாக்காளர் அடையாள அட்டை நகலில் உள்ள முகவரிக்கும், என் தாயார் முகவரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனது தாயாரின் ஓட்டுநர் உரிமம் 1997 ல் வழங்கப்பட்டது. எனது ஓட்டுநர் உரிமம் 2002 ல் வழங்கப்பட்டது. புதிய குடும்ப அட்டையில் என் பாட்டி பெயர் போடப்படவில்லை. பி.வா.சா.ஆ.25 காரைக்குடி அருகே உள்ள கூத்தலூரில் சென்று வாங்கி வந்தோம். பி.வா.சா.ஆ.25 ல் கூத்தலூர் என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் முழுமையான முகவரி இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.26 இறப்பு சான்று எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் காரைக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்டது ஆகும். அதில் காரைக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்டதாக சீல் உள்ளது. பி.வா.சா.ஆ.26 ல் உள்ள சீலில் நான் சொல்வதுபோல் காரைக்குடி சார்பதிவாளர் அலுவலகம் என்று இல்லை என்றால் சரியல்ல. அதில் திருப்பத்தூர் தாலுக்கா, ராமநாதபுரம் மாவட்டம் என்று தான் கண்டிருக்கிறது என்றால் சரிதான். சார்பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. பி.வா.சா.ஆ.26 ஐ எனது அப்பா தான் வாங்கி வந்தார். அதன் அசல் என் தகப்பனார் வசம் உள்ளது. அந்த அசலை வைத்து நான் ஸ்கேன் பன்னிய நகலை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். எனது கொள்ளு தாத்தா 1948 ல் இறந்ததாக சொல்லும் தேதியில் பிறப்பு இறப்பு பதிவுகள் சட்டம் நடைமுறைக்கு வரவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிறப்பு இறப்பு பதிவு சட்டம் கண்டிப்பாக பதிவு செய்ய வேண்டும் என்பது 1969 ல் தான் நடைமுறைக்கு வந்துள்ளது என்றால் 1948 ல் பதிவு

செய்திருக்கிறார்கள். பி.வா.சா.ஆ.26 ல் தேதி என 25.01.2018 என போடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அது விண்ணப்பித்த தேதி ஆகும். பிறப்பு இறப்பு பதிவு சட்டம் கண்டிப்பாக பதிவு செய்ய வேண்டும் என்பது 1969 பிறகு தான் நடைமுறைக்கு வந்துள்ளது என்றும், பி.வா.சா.ஆ.26 வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.29 ஆகிய எனது தகப்பனாரின் வாக்காளர் அடையாள அட்டையிலும் முகவரி குத்துப்பா பள்ளம் என்று உள்ளது. நான் குடியிருக்கும் முகவரிக்கும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆகிய பாட்டியின் கிரைய பத்திரத்தில் ஏற்கனவே ரூ.1250/– கிரைய முன்பணம் பெற்றுக்கொண்டதாக அதில் வாசகம் உள்ளது என்றால் சரியல்ல. பாக்கி ரூபாய் 3750/– என் தாத்தாவால் கொடுக்கப்பட்டதாக பி.வா.சா.ஆ.1 ல் சொல்லப்படவில்லை என்றால் ஒரே ஆவணத்தில் Endorsement பக்கத்தில் அவ்வாறு உள்ளது.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Copy